2019 ஜூலை 18] *[திரு. ஆர்.பி. உதயகுமார்]*

பன்னடுக்கு குடியிருப்பு ஏற்படுத்தி நிரந்தரமாகக் குடியமர்த்தலாம் என அதிகாரிகள் கூட்டத்திலே முடிவு எடுக்கப்பட்டு, அதனைத் தொடர்ந்து மேற்படி பகுதியில் வசிக்கும் குடியிருப்புவாசிகளைக் கணக்கெடுக்கும் பணிக்காகவும் மற்றும் மறு குடியமர்வு பணிக்காகவும் ரூ.9,50,89,320/– தொகை தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்திற்கு அளிக்க அரசிடம் கோரப்பட்டு, சம்பந்தப்பட்ட கோப்பும் தற்போது வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறைக்கு குறிப்புக்காக அனுப்பப்பட்டிருக்கிறது. இந்த வழக்கு நிலுவையிலே இருந்தபோதிலும்கூட மாண்புமிகு அம்மாவினுடைய அரசு அந்த ஏழையெளிய மக்களுக்காக மாற்று ஏற்பாடுகளை செய்து தருவதற்காகவும் நடவடிக்கை எடுத்திருக்கிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(எ) நாகர்கோவில் தொகுதி, அழிக்கால் கிராமம், கடலரிப்பைத் தடுத்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. என். சுரேஷ் ராஜன் அவர்கள்.*

முற்பகல் 11–45

***திரு. என். சுரேஷ் ராஜன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டம், என்னுடைய நாகர்கோவில் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட அழிக்கால் மீனவ கிராமத்தில் ஆண்களும், பெண்களும் இரவில் தூங்காமல் கண்விழித்துக்கொண்டு வாழ்வா, சாவா என்ற அச்சத்தோடு வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.*

அந்த அளவிற்கு கடலரிப்பு ஏற்பட்டு, அனைத்து வீடுகளும் கீழே விழக்கூடிய நிலைமையில் இருந்துகொண்டிருக்கின்றன. 3 தினங்களுக்கு முன்பாக கிழக்குத் தெருவில், ரைமன்டு என்று சொல்லக்கூடிய 55 வயது மீனவர் ஒருவர், வீடு இடிந்து கால் முறிவுற்று உயிருக்கு ஆபத்தான நிலையில் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருக்கிறார். அவர்களுக்கு அரசின் சார்பாக நிதி உதவி வழங்க வேண்டுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அதுகுறித்து மாண்புமிகு மீன் வளம் மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை*

அமைச்சர் அவர்களின் கவனத்தை ஈர்க்கிறேன் என்று மட்டும் சொல்லுங்கள். அவ்வளவுதான். மாண்புமிகு மீன் வளம் மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய முக்கடல் சூழ்ந்திருக்கின்ற தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில், அரபிக் கடலில் தற்போது தட்பவெப்ப சூழ்நிலை காரணமாக கடலின் சீற்றம் அதிகமாக இருக்கின்ற நிலையில், மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு, அடிக்கடி எங்கெங்கெல்லாம் கடலரிப்பு ஏற்படுகின்றதோ, அவற்றையெல்லாம் கண்டறிந்து, உடனடியாக அதைத் தடுக்கின்ற பணியை மேற்கொண்டிருக்கின்றது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதுபோல், அழிக்கால்–மேலமணிக்குடி வரை 396 கோடி ரூபாய் மதிப்பீட்டில் திட்ட மதிப்பீடு தயார் செய்யப்பட்டிருக்கின்றது. எனவே, இந்த நிதி ஒதுக்கீடு பெறப்பட்டவுடன் அந்த இடத்தில் முழுமையான அளவில் கடலரிப்பினைத் தடுப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், இதே பொருள் குறித்து, கிள்ளியூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர், திரு. செ. ராஜேஷ் குமார், உதகமண்டலம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர், திரு. ஆர். கணேஷ், தாராபுரம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர், திரு. வி.எஸ். காளிமுத்து, முதுகுளத்தூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர், திரு. ச. பாண்டி மற்றும் திரு. ஜே.ஜி. பிரின்ஸ் ஆகியோர் கொடுத்துள்ள கவன ஈர்ப்பு அறிவிப்பில் அவரவர்கள் தொகுதி சார்ந்த மீனவக் கிராமங்களில் கடலரிப்பு ஏற்படுகின்ற நிலை குறித்து அரசின் கவனத்திற்குக் கொண்டுவந்திருக்கின்றார்கள். எனவே, பசுமை கால பருவ நிதி, (Green Climate Fund) என்று சொல்வார்கள். அந்த Green Climate Fund மூலமாக முதல் கட்டமாக 648 கோடி ரூபாய்க்கு முன்மொழிவுகள் அனுப்பப்பட்டிருக்கின்றன. அதேபோல் இரண்டாவது கட்டமாக 589 கோடி ரூபாய் அளவில் திட்டம் தயாரிக்கப்பட்டு வருகின்றது. நான் முதலில் சொன்ன 396 கோடி ரூபாயும், முதல் கட்டமாக 648 கோடி ரூபாயும், இரண்டாம் கட்டமாக முன்மொழிவுகள் அனுப்பப்படவுள்ள 589 கோடி ரூபாயும் நம்மால் பெறப்பெற்று, வருகின்ற நிதியாண்டில் நிச்சயமாக பணிகள் அனைத்தும் ஆரம்பிப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகள் எடுக்கப்படும்.